**05.04.2025**

**MCOP.No.14/2017**
**ம.சா. 1 : கஷ்யப் ஷஷாங்க் ரவி**
**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

2) TN09G287 என்ற வாகனத்தின் அசல் பதிவு சான்று அசலுடன் ஒப்பிட்டு நகல் ம.சா.ஆ.7 குறியீடு செய்யப்படுகிறது.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

3) நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. ஆவணங்கள் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். என் இலாக்கா ஜீப்பை ஓட்டி சென்ற ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமத்தையோ, அந்த ஜீப்பின் இன்சூரன்ஸ் பாலிசியை நான் ஒப்படைக்கவில்லை. அந்த தேதியில் அரசாங்க வண்டியின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமமும், பாலிசியும் ஒப்படைக்கவில்லை என்றால் அரசாங்க வண்டிற்கு பாலிசி இல்லை. ஓட்டுநருக்கு உரிமம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இருந்தது. ஓட்டுநர் இறந்துவிட்டதால் அவரின் ஓட்டுநர் உரிமம் ஒப்படைக்கப்படவில்லை.

4) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் அந்த வாகனத்தின் தற்போது நிலை என்ன என்பது பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. விபத்தின் போது என்ன நிலையில் இருந்ததோ தற்போது அப்படியோ தான் இருந்து வருகிறது. சேதாரம் சரி செய்ய முடியாததால் அப்படியே இருந்து வருகிறது. தற்போது வரை அந்த வாகனத்தை சரி செய்யவில்லை என்றால் சரிசெய்ய முடியாத நிலையில் உள்ளது.

5) இந்த மனுவில் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ 2 ல் வாகனத்தை பற்றி தான் சொல்லப்பட்டுள்ளது, துறை பற்றி சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் எவ்வாறு இந்த மனுவிற்கு சம்மந்தப்பட்டது என்று சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி டிவிசன் பிரிக்கப்பட்ட பின்னிட்டு அதில் உள்ள சொத்துக்களுக்கு பொறுப்பாளர் நான் என்பதால் அதனை ஒப்படைத்துள்ளோம்.

6) எம்.வி. அறிக்கையில் மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் உரிமம் பற்றி விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.4 ல் வாகனத்தின் வாங்கிய தேதி 02.09.1992 என்று உள்ளது. மேற்படி வாகனம் அதிகபடியான தூரம் ஓடிவிட்டதால் அதனை பழுது பார்க்க இயலாது என்று ம.சா.ஆ.4 மற்றும் 5 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே விபத்தின் போது மேற்படி விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனம் ஏற்கனவே சேதாரம் ஆன நிலையில் இருந்தது என்றால் சரிதான்.

7) எனவே மேற்படி ஆவணத்தின் படி வாகனத்திற்கு ஆன செலவு என்று நாங்கள் குறிப்பிட்டுள்ள தொகை எதன் அடிப்படையில் என்று குறிப்பிடப்படவில்லை, அதற்குண்டான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி படி தொகை எஸ்டிமேட் தொகை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. எஸ்டிமேட் தொகை மோட்டார் வாகன பராமரிப்பு துறையினால் எங்களுக்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி ம.சா.ஆ.4 (Requisition form) அசலை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை.

8) ம.சா.ஆ.6 ல் குறிப்பிட்டுள்ள அசலையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. மனுவில் நாங்கள் சேதாரம் ஆன வாகனத்திற்கான தொகை கேட்பதற்கும் ஆவணங்கள் ஒப்படைக்கவில்லை. செலவு செய்யாததால் அதை கோருவதற்கு உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 2ம் எதிர்மனுதாரரின் வாகனம் சரியான திசையில், நிதானமாகவும், கவனமாகவும் வந்து கொண்டு இருந்தது என்றும், எங்கள் இலாக்கா ஓட்டுநர் தான் வரும் போக்குவரத்தை கவனிக்காமல், எவ்வித குறிப்பும், சமிக்கையும் காண்பிக்காமல் திடீர் என்று நடு ரோட்டில் வாகனத்தை நிறுத்தியதால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

9) எங்கள் இலாக்கா ஓட்டுநர் இந்த விபத்தில் இறந்துவிட்டாதால் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் மீது பொய்யான புகாரை கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் இந்த மனுவில் விபத்து சம்பந்தமாக மாதிரி வரைப்படம், குற்றப்பத்திரிகை முதலியவற்றை நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த மனுவில் 2ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் செல்லதக்க ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல.

10) எனவே பாலிசி விதிமுறைகள் மீறப்பட்டுள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் வாகனம் ஏற்படுத்திய விபத்திற்கு 3ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எவ்வித இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் இந்த மனுவில் கோரியுள்ள தொகை மிக அதிகமானதும் என்றும், செலவு செய்தற்கும் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்பதால் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எவ்வித இழப்பீடு கொடுக்க கடமைபட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனவே இந்த மனு 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தை பொறுத்து தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

11) என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.5 ஆவணத்தின் 2ம் பக்கத்தை நாங்கள் தாக்கல் செய்யவில்லை. நாங்கள் மனுவிற்கு தக்கவாறு ஆவணங்களை நாங்களாக தயார் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.04.05 17:29:04 +0530

**Accidents Claim Tribunal, Attur.**